***திரு. துரைமுருகன்:** பேரவைத் தலைவர் அவர்களே, ஓர் உறுப்பினர் தன் தொகுதியில் இருக்கிற அல்லது தனக்குத் தெரிந்த செய்திகளை சட்டமன்ற உறுப்பினர் என்ற முறையில் தனக்கு வருகிற செய்திகளை இந்த மன்றத்திலே தெரிவிக்கிறார். உடனே நீங்கள் உத்தரவு போட்டிருப்பீர்கள். ஆனால், அதிகாரிகள் அப்படி நடந்திருக்க மாட்டார்கள். அதைத்தான் உறுப்பினர் சொன்னார். அரசு என்ன செய்ய வேண்டும்? அப்படி இருந்தால் எங்களிடத்திலே கொடுங்கள் நடவடிக்கை எடுக்கிறோம் என்று சொல்ல வேண்டும். (மணியடிக்கப்பெற்றது) இல்லை, இல்லை. உடனே எடுத்துவிட்டால் எப்படி? உடனே expunge செய்தால் எப்படி?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஜெயக்குமார் முடியுங்கள். (குறுக்கீடு) இல்லை, இல்லை. பதில் சொல்லியிருக்கிறார்கள். அமைச்சர்கள் பதில் சொல்லிவிட்டார்கள். ஜெயக்குமார் வாக்கியத்தை நிறைவு செய்யுங்கள்.

திரு. கு. ஜெயக்குமார்: ஒரே நிமிடத்தில் முடித்துவிடுகிறேன், சார். மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, நம்முடைய அமைச்சர்கள் அனைவரும் பதில் அளிக்கின்ற நேரத்திலே ஒவ்வொரு துறையைப் பற்றியும் பேசுகின்றபோது தத்தம் துறைதான் இந்தியாவிலேயே முதன்மைத் துறையாக விளங்குகின்றது என்றும் தமிழகம் முதன்மையை நோக்கிச் சென்று கொண்டிருக்கின்றது என்றும் இங்கே குறிப்பிட்டார்கள். நான் பல புள்ளிவிவரங்களைப் பார்த்தேன். குறிப்பாக வறுமைக் கோட்டுக்குக் கீழாக இருக்கின்ற மக்களுக்காக இருக்கின்ற புள்ளிவிவரம் 2000—ஞானசேகரன் பேசியபோது மாண்புமிகு முதல்வர்கூட அதற்கு பதில் அளித்தார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: புதிய கருத்துக்கு நேரம் இல்லை. திரு. கு. ஜெயக்குமார் அவர்கள் பேச்சு நிறைவுபெற்றது. விவாதம் நாளை தொடரும். (குறுக்கீடு) உங்களுடைய பேச்சு நிறைவுபெற்றது. விவாதம் நாளையும் தொடரும்.

8. அரசினர் தீர்மானம்

(அ) விதி 32-ஐத் தளர்த்தல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நாளை 12–4–2005 வினாக்கள்–விடைகள் நேரத்தை ஒத்திவைப்பது குறித்த தீர்மானம். மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"சட்டமன்றப் பேரவையின் முதல் ஒரு மணி நேரம் வினாக்கள்–விடைகள் என்று உள்ள சட்டமன்றப் பேரவை விதி 32–ஐ நாளை, 12–04–2005 செவ்வாய்க்கிழமை அன்று தளர்த்தி, அந்நேரம் அரசினர் அலுவல்களுக்கு எடுத்துக்கொள்ளப்பெற வேண்டும்"

என்னும் தீர்மானத்தை மொழிகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க.

மறுப்போரே இல்லை, தீர்மானம் ஒருமனதாக நிறைவேறியது.

நாளை (12–04–2005) வினாக்கள்–விடைகள் நேரம் இல்லை.

(ஆ) விதி 55 (6)-ஐத் தளர்த்தல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நாளை (12–4–2005), இரண்டிற்கும் மேற்பட்ட கவன ஈர்ப்பு அறிவிப்புகள் எடுத்துக்கொள்ளப் பெறவேண்டும் என்பது குறித்த தீர்மானம். மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"சட்டமன்றப் பேரவை விதி 55 (6)–ஐத் தளர்த்தி, நாளை (12–04–2005), இரண்டிற்கும் மேற்பட்ட கவன ஈர்ப்புத் தீர்மானங்களை எடுத்துக்கொள்ளலாம்"

என்னும் தீர்மானத்தை மொழிகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.